[2003 நவம்பர் 4

அணை பேச்சிப்பாறை அணை. அந்த அணையில் இதுவரைக்கும் தூர் வாரப்படவில்லை. எனவே, கிட்டத்தட்ட பாதி அணை தூராலே நிறைந்து இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதை தூர் வாரினால் இன்னும் ஒரு பேச்சிப்பாறை அணையினுடைய தண்ணீர் கொள்ளளவு அதிகமாக வருவதற்கு சாத்தியக்கூறு இருக்கிறது. அதேபோல, கன்னியாகுமரி மாவட்டத்திலே உலக்கை அருவி அணைத் திட்டம் வரும் என்று வெகு நாட்களாக சொல்லி வருகிறார்கள். அதுவும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதா? அதுவும் நடைமுறைக்கு வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் குமாரதாஸ், தனிக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 23, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு நிதி அமைச்சர்.

23—

தொகுதி எல்லையைச் சீரமைத்தல்

***37716—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 12 ஊராட்சிகளை திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதியில் சேர்த்து தொகுதி எல்லையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளை எல்லை மறுவரையறை செய்ய இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 84-வது சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, எல்லை மறுவரையறை சட்டம் 2002 பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி அமைக்கப்பட்டுள்ள எல்லை மறுவரையறை ஆணையம், உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி திரு. குல்தீப் சிங் அவர்களின் தலைமையில் 04-07-2002 முதல்

2003 நவம்பர் 4]

செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திலுள்ள மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகளை 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மாற்றி மறுவரையறை செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

சட்டமன்றத் தொகுதிகளின் மறுவரையறை செய்யும் அதிகாரம், எல்லை மறுவரையறை ஆணையத்தின் வரம்பிற்குட்பட்டது. எனினும், இந்த ஆணையத்தில் அலுவல் சாரா உறுப்பினராக உள்ள தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் மூலமாகவும் மற்றும் தமிழ்நாட்டிலிருந்து ஒருங்கிணைப்பு உறுப்பினர்களாக முன்மொழியப்பட்டுள்ள சட்டப்பேரவை மற்றும் மக்களவை உறுப்பினர்கள் மூலமாகவும் இத்தகைய பரிந்துரைகள் மேற்கொள்ளப்படலாம்.

முற்பகல் 10-20

திரு. எஸ்.எம். சீனிவேல்: அம்பாள் திசைநோக்கி வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதிக்கு ஏற்கெனவே 3 ஒன்றியங்கள், திருபுவனத்தைச் சேர்த்து; பேரவைத் தலைவர் அவர்களுக்கு திருமங்கலத்திலே ஒரு ஒன்றியம்; கள்ளிக்குடியிலே ஒரு ஒன்றியம். ஆகவே, என்னுடைய திருப்பரங்குன்றம் ஒன்றியத்திலே உள்ள 12 ஊராட்சிகளை— திருப்பரங்குன்றம் ஒன்றியத்திற்கு உட்பட்ட அந்த 12 ஊராட்சிகளை— திருப்பரங்குன்றம் தொகுதியில் சேர்ப்பதற்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் நாவினால், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டத்திலே இடம் இல்லை என்று சொல்லிவிட்டார்.

வினா எண் 24, திரு. வெ. ஏழுமலை. மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

24—

தகவல் தொழில்நுட்பவியல்

***17216—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—